விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | தை 20 | சனிக்கிழமை (02.02.2002) | தொலைபேசி 3378 | ஒலி 45

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
RENY
கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### புதிய அரசுக்கு புதிய தலையிடி

# யுத்தமா ? சமாதானமா ?

# முடிவு ஜனாதிபதியின் கையில் !

## பாலபட்ட பெண்டி அறிவிப்பு

(நமது நிருபர்)

**இந் நாட்டில் யுத்தத்தையோ, அல்லது சமாதானத்தையோ பிரகடனப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியின் கரங்களிலேயே இருக்கிறது. இத்தகைய அதிகாரத்தை அரசியல் அமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது.**

**ஜனாதிபதிக்கு உரிய நிறைவேற்று அதிகாரத்தில் எந்த விதமான மாற்றமோ, குறைப்போ இதுவரை செய்யப்படவில்லை நாட்டின் தலைவி என்ற வகையிலும் முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் நாட்டில் யுத்தமா சமாதானமா என்ற பிரகடனத்தை ஜனாதிபதியே தீர்மானிப்பார்.**

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் செயலாளர் பாலபட்டபெண்டி விடுத்துள்ள விஷேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு குறித்து பொய்யான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன இவற்றுக்கு எந்த விதமான ஆதாரங்களும் இல்லை ஜனாதிபதியின் பாதுகாப்புபிரிவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சில ஊடகங்களும் வேறு சில நிறுவனங்களும் செயற்படுகின்றன. இது ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நிகால் கருணாரட்ணாவை கைது

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ் சிறைக் கைதிகள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் 17 கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது தொடர்பாக யாழ் சிறைச்சாலை வட்டாரங்கள் தகவல் தர மறுத்துவிட்டன.

(ந-10)

### புலிகளின் நிர்வாக சேவை

## பொறுப்பாளர் பூவண்ணனுடன் தமிழ், முஸ்லிம் எம்பிகள் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணனை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் தனித்தனியே வெவ்வேறு தினங்களில் சந்தித்து பேசியுள்ளனர்.

இச் சந்திப்பு மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் கொக்குப்படையா எனுமிடத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான இச் சந்திப்பில், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக குரல் கொடுப்பதுடன் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட உரிமைகள் தொடர்பாகவும் குரல் கொடுக்க வேண்டுமென்று பூவண்ணன்

(8ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிக்கான கண்டி வீதி
### பெப். 15ல் திறப்பது உறுதி

(வவுனியா)

கடந்த பத்து வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாணம் கண்டி வீதியை, (ஏ-9) வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை திறப்பது தற்போது உறுதியாகி விட்டது. மேற்படி வீதியை இம் மாதம் 15ம் திகதி திறப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

இப் பாதை திறப்பதற்கு விடுதலைப்புலிகள் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்தனர். கடந்த வியாழக்கிழமை ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்த அரச அதிபர் கே. கணேஷ் 15ம் திகதி வைபவ ரீதியாக பாதை திறந்து வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இப் பாதை

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ போராட்டத்தை கைவிடுவதாக புலிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

## 1000 ... அகதிகள்

# 4000 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம்!

## பிரதி அமைச்சர் முஹைறதீன் தகவல்

(கொழும்பு)

இராமேஸ்வரம் அகதிகள் முகாமில் வாழும் சுமார் 4000 இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக பிரதி கடற்றொழில் அமைச்சர் முஹைறதீன் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

அரசும் விடுதலைப்புலிகளும் மோதல் தவிர்ப்பை கடைப்பிடித்து வருவதனால் அவர்கள் தம் சொந்த இடத்தில் வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை தமிழக அகதி முகாம்களில் சுமார் 10 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ளதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் (ந- 4)

## பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள பயத்திற்கு காரணம் தனி இராச்சியத்திற்காக புலிகள் இயக்கம் போராடி வருகின்றது என்ற சந்தேகமே ஆகும்.

எனவே இந்தச் சந்தேகத்தை புலிகள் இயக்கத்தினர் மக்கள் மத்தியில் இருந்து நீக்க வேண்டும் அப்போதுதான் நாட்டுமக்கள் சமாதான முன்னெடுப்புக்களுக்க ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமதங்கள் அமைப்பின் தலைவர் பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கொழும்பு பொறளையிலுள்ள செடக் நிறுவனத்தில் புதன் கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்.

தமிழீழத்திற்கான போராட்டத்தை மேற்கொள்ளப்போவதில்லை என விடுதலைப்புலிகள் மக்கள் முன் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் போது புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கி இடையில் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் மீண்டும் தடையை ஏற்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் (உ)

## சிற்றி ஒவ் றிங்கோ பயணம் தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் இருந்து நேற்று சுமார் 400 பயணிகளுடன் திருமலை நோக்கிப் புறப்பட்ட சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் கப்பல் நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக பயணத்தை இடையில் நிறுத்திக் கொண்டு மீண்டும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு திரும்பியது.

இதன் காரணமாக பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் பயணிகள் 400 பேரும் தத்தம் இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளனர்.

இதே வேளை நேற்றுப் பெய்த கடும் மழையினால் குடாநாட்டுக்கான விமான சேவையும் பாதிப்படைந்தது. (ந-4)

# கிளி – முல்லைத்தீவுக்கு தொலைபேசி வசதி

## அமைச்சர் ஜயலத் அறிவிப்பு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கும் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்கடர் ஜயலத் ஜெயவர்த்தனா ரெலிக்கொம் அதிகாரிகளை கேட்டுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற கிளி நொச்சிக்கும் முல்லைத்தீவுக்குமான தொலைபேசி இணைப்புக்கள் வவுனியாவிலுள்ள தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தின்

(8ம் பக்கம் பார்க்க)

## கொட்டும் மழையிலும்

# மீனவர்களின் மறியல் போராட்டம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

கொட்டும் மழையிலும் நேற்று மூன்றாவது நாளாக மீனவர்களின் மறியற் போராட்டம் யாழ் செயலகத்தின் முன் தொடர்ந்தது. பல நூற்றுக்கணக்கான மீனவ சங்க அங்கத்தவர்கள் கொட்டும் மழையிலும் குடைகளுடனும், நில விரிப்புக்களுடனும் நின்று மறியற் போரில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் உள்ளூராட்சித் தேர்தலுக்கான மனுத் தாக்கல் செய்யும் முதல் நாளாகையால் செயலகத்தின் முன் 25க்

(8ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

சிறு விளம்பரம்

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த26 வயதுடைய செவ்வாய்குற்றமற்ற பட்டதாரி ஆசிரியருக்கு அழகான படித்த மணமகள் தேவை தொடர்பு: விளம்பர இல 232 மே-பா வலம்புரி யாழ்ப்பாணம்.

(4421)


## சுவாமிவிவேகானந்தர் நினைவுவிழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் நினைவுதினத்தை ஒட்டி 4 ம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணிமுதல் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் விசேட பூசை வழிபாடும் மாலை சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது.

இராமகிருஷ்ணாலயஅதிபர் இ. இராஜ மகேந்திரசிங்கம் சிறப்புரை ஆற்றுவார். (வ)

## சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்

(மானிப்பாய்)

வலி தென் மேற்குப் பகுதி சனசமூக நிலைய நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அன்ரன் ஜோன்சன் தலைமையில் பிரதேச சபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி, சனசமூகநிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் வி. கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-232)

# கற்றல் கற்பித்தல் உபகரண கண்காட்சிப் போட்டி முடிவு

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட மட்டத்தில் அண்மையில் இடம் பெற்ற ஆரம்பப்பிரிவு கற்றல் கற்பித்தல் உபகரணப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வலயமட்ட உபகரணக்கண்காட்சிப் போட்டிக்குத் தெரிவானவர்களின் விபரங்கள் வருமாறு:

ச. கோமதி (கொல்வளம்) புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, திருமதி த. சத்தியலிங்கம் (புதிர்சொல்வளம்) புத்தூர், சோமஸ்கந்தாக்கல்லூரி தி. றிஸ்வி (இ. என். ஜி பேட்ஸ்) புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, கு. சிவகுமார் (சுழல் சக்கரம்) புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி, அ. அருள்மொழி (கதைத் தொகுதி) இடைக்காடு ம. வித்தியாலயம், ச. சடகோபன் (ஒட்டுச்சித்திரம்-காகம்) அச்சுவேலி மத்திய கல்லூரி, கு. சரவணேஸ்வரன் (மொழியாக்க உபகரணம்)அச்சுவேலி மத்திய கல்லூரி, சி. பாலசுப்பிரமணியம்(செருகல்அட்டை மொழி) அத்தியார் இந்துக் கல்லூரி,திருமதி.சோ. யோகலட்சுமி (கதை-ஆக்கத் தொழிற்பாடு) ஆவரங்கால் நடராஜ ம.ம.வி, கு. கிருபாகரமூர்த்தி (சமிக்ஞை) வாதரவத்தை விக்னேஸ்வரா, திருமதி ப. முரளிதரன் (தேசியக் கொடி) கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், ச. கல்யாணி (காந்த வழிகாட்டி சுழலி உபகரணத் தொகுதி) உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்,திருமதி பா. செல்வரத்தினம் (சஞ்சிகைகள்) உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், திருமதி தி. ரகுநாதன் (கணிதச்செயற்பாடுகள்) நீர்வேலி சீ சி.த.க இ. சுபாசினி (பொறி,மொழி உபகரணத் தொகுதி) கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், திருமதி. அ. சந்திரசேகரம் (எண்வலை) கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், திருமதி. எம். ஜே. எஸ் முத்துச்சுமாரசுவாமி(இ. என் ஜி தொகுதி) கோப்பாய் நாவலர், ம. நிஷியாமளா(மொழி உபகரணத் தொகுதி) கோப்பாய் நாவலர், ப.ஜெயராணி (மொழி உபகரணத்தொகுதி) கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், திருமதி. த. அம்பிகைபாகன்(ஹெலி கப்பல்) நவக்கிரி அ. மி. த. க திருமதி த. ரகுமார் (கேலிச் சித்திரம்) கோப்பாய் வடக்கு றோ. க, திருமதி இ. சபாபதி (சஞ்சிகை) கோப்பாய் ம.வி, திருமதி ம. சிவநாதன்(கதை) பா. கமல்ராஜ் (இ. என். ஜி கிளாஸ்கும்) உரும்பிராய் சந்திரோதய வித், பொ.வரதகுலசிங்கம் (ஆக்கம்) தோப்பு அருள் நந்திவித், தா. மேரி யோகராணி (மொழி கணிதம் பாடல் தொகுதி) உரும்பிராய் றோ. க, வே. இரத்தினபாலன் (சஞ்சிகை) உரும்பிராய் றோ. க

(உ-79-3)

# ஆறுமுகம்தொண்டமான் மீண்டும் மட்டு.செல்வார்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் எதிர்வரும் 12ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாடற்ற மட்டக்களப்புப் பகுதிக்கு செல்லவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தம்மை மீண்டும் இராணுவக்கட்டுப்பாடற்ற மட்டக்களப்புப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு அல்பின்சன் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற புதிய 'அலகல்' வட்டத்தின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தாம் பிரதமரிடம் எடுத்துக் கூறியதாகவும் இதன்போதே மீண்டும் அப்பகுதிக்குச் சென்று நிலைமைகளைஉடனுக்குடன் அறியத் தருமாறு பிரதமர் கேட்டதாகவும் தெரிவித்துள்ளார். (உ-5)

## 103.6 மி.மீ மழை பதிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழன் இரவு 9.00 மணி தொடக்கம் நேற்று காலை 9.00 மணி வரையான 12 மணி நேரத்தில், 103.6 மில்லி மீற்றர் மழை யாழ். குடாநாட்டில் பதிவாகியுள்ளதாக திருநெல்வேலியில் அமைந்துள்ள வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது

(உ-9)

## சிக்கன கடனுதவிச் சங்கம்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் பகுதியில் இந்தன்முத்து விநாயகர் என்ற பெயரில் சிக்கன கடனுதவிச் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நிர்வாக சபைத் தெரிவின் போது தலைவராக தி. அருளானந்தம், செயலாளராக ஸ்ரீ. முகுந்தன், பொருளாளராகசோ. ஜெகதீஸ்வரன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ- 75)

## மண் அள்ளத் தடை

(மானிப்பாய்)

நவாலி தெற்கு கொத்துக்கட்டிப் பகுதியில் அத்துமீறி மண் அள்ளுவது எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி மண் அள்ளுவோர் மீதும், வாகன உரிமையாளர்கள்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென வலி தென்மேற்கு பிரதேர சபைத் தலைவர்வெ.அன்ரன்ஜோண்சன் அறிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்கும் படியும் அவர் கேட்டுள்ளார்

உ-232)


## அரசாங்க அறிவித்தல்

## உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் - 2002

### நியமனங்கள் ஏற்றல்

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள கீழ் வரும் 16 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் தொடர்பான நியமனங்கள்,2002 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2002 பெப்புருவரி மாதம் 8 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கச்சேரி-நல்லூர் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிரதேசச் செயலரின் அலுவலகத்தில் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும் என 2002 சனவரி மாதம் 31 ஆம் திகதி நான் அறிவித்திருந்தேன்.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் மேற்படி நியமனங்கள் 2002 பெப்புருவரி மாதம் 2ம்திகதி தொடக்கம் 2002 பெப்புருவரி மாதம் 8-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை 48, காட்டுக் கந்தோர் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் (வகிமா) என்னால் ஏற்றுக் கொள்ளப்படும் என தற்பொழுது அறிவித்துக் கொள்கிறேன்.

1. யாழ்ப்பாணம் மாநகர சபை
2. வல்வெட்டித்துறை நகர சபை
3. பருத்தித்துறை நகர சபை
4. சாவகச்சேரி நகர சபை
5. நெடுந்தீவு பிரதேச சபை
6. வேலணை பிரதேச சபை
7. ஊர்காவற்றுறை பிரதேச சபை
8. வலிகாமம் மேற்கு பிரதேச சபை
9. வலிகாமம் வடக்கு பிரதேச சபை
10. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
11. வலிகாமம் தெற்கு பிரதேசசபை
12. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
13. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
14. பருத்தித்துறை பிரதேச சபை
15. சாவகச்சேரி பிரதேச சபை
16. நல்லூர் பிரதேச சபை

எஸ். நடராசா

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாவட்டம்.

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002 பெப்புருவரி 1ஆம் திகதி.

(சி-3426)


## வட- கிழக்கு அரச அதிபர்களுடன்

# உள்ளூராட்சி தேர்தலை நடத்தும் சாத்தியம் குறித்து ஆராய்வு!

(கொழும்பு)

வடக்கு கிழக்குமாகாணங்கலில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தக் கூடியதானசூழ்நிலை பற்றி ஆராய்ந்து அறிக்கை தருமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன வடக்கு கிழக்கு அரச அதிபர்களைக் கேட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன வடக்கு கிழக்கு மாகாண அரச அதிபர்களை நேற்று தனது அமைச்சின் அலுவலகத்திற்கு அழைத்துபேச்சு நடத்தினார்.

இப் பேச்சுவார்த்தையின் போது உள்ளூராட்சித் தேர்தல் பாதுகாப்பிற்கு பொலிசாரையும் இராணுவத்தினரையும் அனுப்ப முடியாது இந் நிலையில் பொலிஸ்உதவி இன்றி தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை உண்டா என்பதை ஆரய்ந்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டார்.

இதேவேளை வன்னிக்கு அனுப்பப்படும்சீமெந்து,பெற்றோல் என்பன எத்தகைய பாவனைக்குப் பயன்படுத்தப் படுகிறதென்பதை அறிந்து தகவல் தருமாறும் அமைச்சர் மாரப்பன வன்னி அரசஅதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக் கூட்டத்தின் போது அமைச்சர் பேரசிரியர் ஜி.எல் பீரிசும் சமுகமளித்திருந்தார்.

(வ)

## படையினர் கைதுசெய்த இருவருக்கு விடுதலை

(மந்திகை)

பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கிழ் கைது செய்யப்பட்டு கடந்த ஐந்துமாத காலமாக சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரை பருத்தித்துறை மாவட்ட நிதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 2 ம் திகதி கைது செய்யப்பட்ட புத்தூரைச் சேர்ந்த சபாரத்தினம் முருகானந்தன். அதேமாதம் 22 ந் திகதி கைது செய்யப்பட்ட அச்சுவேலியைச் சேர்ந்த திருநாவுக்கரசு நீதிராசா ஆகியோர் விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இருவருக்கும் எதிரான வழக்கில் குற்றசாட்டுக்களை நிரூபிப்பதற்கான போதிய ஆதாரங்கள் இல்லை என்பதால் இருவரையும் விடுதலை செய்வதாக பருத்தித்துறை மாவட்ட நிதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் தீர்ப்பளித்தார். (ந-23)

## அமெரிக்க பிரஜைகள் பாகிஸ்தான் செல்வதற்கு மீண்டும் தடை விதிப்பு

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்கா தனது பிரஜைகளை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானில்தங்கியிருந்த அமெரிக்க பத்திரிகையாளரானடானியல் பெரல் (வயது 38) தீவிர வாதிகள் சிலரால் கடத்தப்பட்டதைத் தொடர்ந்தே அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பத்திரிகையாளர் கடத்தப்பட்டு கைகள் விலங்கிடப்பட்ட நிலையில் அவரது தலையை பிஸ்ரலால் குறி பார்த்து நிற்கும் படமொன்றை தீவிரவாதிகள் அமெரிக்காவுக்கு ஈமெயில் மூலம் அனுப்பி வைத்துள்ளனர்.

அமெரிக்கர்கள் பாகிஸ்தானுக்குசெல்வதற்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த தடை மூன்று நாட்களுக்கு முதல் நீக்கப்பட்டிருந்தபோதிலும் பத்திரிகையாளர் கடத்தப்பட்ட செய்தி அமெரிக்காவுக்குத் தலையிடியைக் கொடுத்ததை அடுத்து மீண்டும் இந்த தடை அமுல்படுத்தப் பட்டுள்ளது.

(5)

## குவைத்தில் தீ விபத்து 15பேர் காயம்

(கட்டார்)

குவைத்திலுள்ள எரி பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 15 பேரில்10 பேரின் நிலை கவலைக்கிடமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# நாடு முழுவதும் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க வேண்டும்

## பொ.ஐ.மு-அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ளூ ராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டும் என பொது ஜன ஐக்கிய முன்னணி, ஆளும்அரசைக் கோரியுள்ளது.

பொதுத் தேர்தல் முடிவ டைந்து பல வாரங்களாகியும் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் மீதான வன் முறைகள் மற்றும் பாதுகாப் பற்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கும் இவ் வேளை யில்:

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதானது மீண்டும் வன்முறைக் கலாசாரம் நாட் டில் தலைவிரித்தாட வாய்ப் பாக அமைந்து விடுமெனவும்,

தமது கோரிக்கைக்கு செவி சாய்க்காது வடக்கு-கிழக்கில் மாத்திரம் தேர்தலை இடை நிறுத்தி ஏனைய இடங்களில் அதனைநடத்த முற்பட்டால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடு படுவோம் எனவும் அவர்கள் அரசை எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோன் உள்ளூராட்சித் தேர்தல்க ளுக்கு பொ.ஐ'மு. துணை போகக்கூடாதென கேட்டுள் ளமை இங்கு குறிப்பிடத்தக் கது. (உ)

### எழுத்து வன்மை

வேந்தர் மறுத்த போதிலும் மாணவர்களின் முயற்சிவென் றது எனலாம்.

அன்று அண்ணா 'இளம் உள்ளம்' என்ற தலைப்பில், தலைப்பை விட்டு சற்றும்வில காமல் வெகுசிறப்பாகப் பேசி னார். அதுவரை அவரது எழுத்துக்களில் கண்டிருந்த சொல்லழகையும், கருத்துச் செறிவையும் செவியாரக் கேட்டமாணவர்களும், பண்டி தர்களும் பேராச்சரியக் கட லில் மூழ்கித் தத்தளித்தார் கள். இவரா அவர்? எவ்வளவு அருமையாகப் பொருள் நயத் தோடுபேசுகிறார் என்றுவியப் போடு விமர்சனம் வெளியிட் டனர். அதே போல் பலதட வைகள் அந்தப் பல்கலைக்கழ கத்தில் பேசினார். ஆங்கிலத் தில் கூட அடுக்கு மொழியில் பேசினார். அண்ணாவிடம் பயந்து கொண்டிருந்த பண்டி தர்களும், கருத்து வேற்றுமை கொண்டிருந்தோரும் அவர் எதையும் பேசவல்லவர் என் பதை ஒப்புக் கொண்டனர்.

பட்டிமன்றம்

அண்ணா இந்தியை எதிர்த் துச் சிறை சென்று நான்கு மாதத் தண்டனை முடிந்து விடுதலையாகி வந்தபோது சென்னையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றுநடை பெற்றது. அந்தக்கூட்டத்தில் தமிழ் நாடு தமிழருக்கேஎன்று அண்ணா முழங்கினார். இந் தக் கூட்டத்திலேயே முதன் முதலாக அண்ணாவின் பேச் சாற்றலைக் கேட்டுப் பொது மக்கள் பிரமித்தார்கள். 1937 ஆம் ஆண்டு சென்னையில்ஒரு பட்டிமன்றம் நடைபெற்றது. இராஜாஜி அதற்கு நடுவராக இருந்தார். பலர் ஆதரித்தும் எதிர்த்தும் பேசினர். இந்த அண்ணாதுரையை மட்டும் பேச அனுமதிக்காதீர்கள் என்று ஒருவர் இராஜாஜியி டம்கூறினார். 'இந்த அண் ணாதுரையார்?இவரைப்பத்து நிமிடம் பேசவிட்டால் என்ன குடிமுழுகிப் போகும்' என்று இராஜாஜிகேட்டு அவரைப் பேசஅனுமதித்தார். அண் ணாமடை திறந்தாற்போலப் பேசினார். அவரின் பேச்சு மிகச் சிறப்பாக அமைந்திருந் தது. மறுநாள் இராஜாஜி சில காங்கிரஸ் தலைவர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில்; 'நீங்களும் தான்பேசுகிறீர்கள் நேற்று அண்ணாதுரை என்ற இளைஞன் பேசினான். பேச் சாக வா பேசினான். நெருப் புப் போன்ற சொற்களையல் லவா கொட்டினான்' என்று சொன்னார்.

அன்று 'இந்த அண்ணா துரையார்?' என்று கேட்ட வர்களும் மதித்துப் போற்றும் படியாக வாழ்க்கையில் முன் னணிக்கு வந்தது அவரின்ஆற் றலின் காரணமாகவே தான். அவரதுகடுமையான தூய்மை யானஉழைப்பின் காரணமாக இத்தகையஉயர்வு ஏற்பட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது. மிகஎளிய குடும்பத் தில் காஞ்சிபுரத்தில் (1909 ஆம் ஆண்டு செப்டம்பர்15 ஆம் நாள்) சௌம்ய தமிழ் ஆண்டில் பிறந்த அவர் அறு பது ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார்.)

## பிரதேச சபைகளுக்கு உழவு இயந்திரம்

(மானிப்பாய்)

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச சபைகளுக்கு தலா ஒரு உழவு இயந்திரம் வழங் கப்படவுள்ளது.

இவை தற்போது கொழும் பில் இருப்பதனால் விரைவில் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

முன்னாள் வடக்கின் புனர் வாழ்வு,புனரமைப்பு அமைச் சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சின் பேரில் இந்த உழவு இயந்திரங் களுக்கான நிதி வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் ஏற் கனவே ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-232)

உள்ளூராட்சி திருத்த சட்டமூலம்

## பொதுஜனஐக்கியமுன்னணி எதிர்த்து வாக்களிக்கும்

(கொழும்பு)

உள்ளூராட்சிதேர்தல்திருத் தச்சட்ட மூலம் பாராளுமன் றில் சமர்ப்பிக்கப்படும் போது பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கள் அதனை எதிர்த்து வாக்க ளிப்பரென அக் கட்சியின்பேச் சாளரான சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில்பொதுத் தேர்தலை நடத்த முடியுமா யின் உள்ளூராட்சித் தேர் தலை ஏன் நடத்த முடியா தென கேள்வி எழுப்பிய சரத் அமுனுகம வடக்கு கிழக்கில் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு தமது கட்சி கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்குமென் றும் குறிப்பிட்டார்.

நாடுமுழுவதிலும் உள்ளூ ராட்சித் தேர் தலை ஒரே தினத்தில் நடத்த முடியா விடின்அதனை ஒத்தி வைப் பதை தமதுகட்சிவிரும்புவதா கவும் அவர் மேலும் கூறியுள் ளார். (உ-5)

## 'இங்கிருந்து' அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் சார் பில் பன்னிரண்டு எழுத்தா ளர்களின் 'இங்கிருந்து' சிறு கதைத் தொகுதிஅறிமுகவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்க மண்டபத் தில் சங்க தலைவர் த.சிதம் பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

## எல்லே போட்டி

(ஏழாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய் யப்பட்ட விளையாட்டுக் கழ கங்களுக்கிடையிலான குழுப் போட்டிகளில் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆண்களுக்கான எல்லே போட்டி மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்ட ரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு 16 விளை யாட்டுக் கழகங்கள் விண்ணப் பித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (உ-12)

## மீனவர் போராட்டத்திற்கு வர்த்தகர் சங்கங்களின் இணையமும் ஆதரவு

(மந்திகை)

கடற்றொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ளதடைகளை நீக்கி மீனவர்கள்சுதந்திரமாக தொழிலில் ஈடுபட அனும திக்குமாறு கோரிகடற்தொழி றாளர் சங்கத்தின் ஏற்பாட் டில் நடைபெற்றுவரும் மறி யற் போராட்டத்திற்கு வட மராட்சி வர்த்தகசங்கங்களின் இணையம் ஆதரவு தெரிவித் துள்ளது.

யாழ். செயலகம் முன்பாக தொடர்ந்து நடை பெற்று வரும் மறியற் போராட்டத் திற்குஆதரவுதெரிவித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் ;

கடற்றொழிலாளர்கள் படும் இன்னல்கள் பலரும் அறிந்ததே. மேற்கொள்ளப் பட்டுவரும் மறியற் போராட் டத்திற்கு நாம்எமதுஆதரவை வழங்குவோம் எனவும்,

மறியற் போராட்டத்திற் குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு வர்த்தக சங் கங்களின் இணையம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ-5-23)

இன விகிதாசார அடிப்படையில்

## அரச நியமனங்கள் வழங்க ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

இன விகிதாசாரத்தின் அடிப்படையில் அரச நிறுவ னங்களில் உள்ள வெற்றிடங் களிற்கு நியமனங்கள் வழங் கப்பட வேண்டியதுஅவசியம்.

'ஐ. ஆர். ஏ,புலிகள் இயக் கம் ஆகிய அமைப்புக்களின் பயங்கரவாதமும் சமாதான பேச்சுவார்த்தையும்' என் னும் நூல் வெளியீட்டு விழா வில் பேசுகையில்; கப் பல்துறை கிழக்கு அபி விருத்தித்துறைமுக அபி விருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரி வித்துள்ளார்.

பெரும்பான்மை இனத்தவ ரான சிங்கள மக்கள் சிறு பான்மை இனத்தவரான தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது புறந்தள்ளி விடு வார்கள் என தமிழர்கள் அஞ் சுவது போல,வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் அங்கு வாழும் பெரும்பான்மை இனத்தவ ரான தமிழ் மக்கள் தமது உரி மைகளை வழங்காது ஒதுக்கி விடுவார்கள் என அஞ்சுகின்ற னர்.

உலகநாடுகளில் சமத்து வம் என்பது கேள்விக்குறி யாக இருக்கிறது.

பல்வேறு இனத்தவர்கள் வாழும் இந்நாட்டில் சமத்து வம் பேணுவது கடினமான காரியமாக இருந்த போதும் வேலை வாய்ப்புவழங்குவதில் இனவிகிதாசாரமுறையைபின் பற்றுவதன் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## மட்டு. சிறைக் கைதிகள் நேற்று உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சா லையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சிறைக்கைதிகள் 43பேர் நேற்றுக்காலை முதல் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள் ளனர்.

உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளோரில் பெண்ணொருவரும் அடங்கு வர்.

உண்ணாவிரதமிருக்கும் கைதிகளை தமிழர்விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் நேரில் சென்று பார் வையிட்டுள்ளார்.

கைதிகளின் விடுதலை தொடர்பான நடவடிக்கை கள் தமிழ் கூட்டமைப்பு மேற் கொண்டு நீதியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள் ளதாகவும் உண்ணாவிரத மிருக்கும் கைதிகளுக்கு அவர் உறுதியளித்துள்ளார். (உ-5)

## நச்சு ஊசி ஏற்றி கொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

கொழும்பு றிமாண்ட் சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருந்த சந்தேக நபர் ஒரு வருக்கு இனந்தெரியாதவர் கள் நச்சு ஊசி ஏற்றி கொலை செய்ய முயன்றதாக தெரிவிக் கப்படுகிறது.

மாலபே தம்மிகா என்னும் பாதாள உலகத்தவரின் உடந்தையாளரான இவர் மிக மோசமான நிலையில் உடனடியாகவைத்திய சாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருக்கு நஞ்சை ஏற்றிய வர்கள் இன்னமும் அடையா ளம் காணப்படவில்லை (உ)

பிச்சை எடுத்த பணத்தில்

## பிள்ளையாருக்கு வெள்ளிக் கவசம்

(புதுடில்லி)

பிச்சை எடுத்துச் சேர்த்த 65ஆயிரம் ரூபா பணத்தில்7 கிலோ எடையுள்ள வெள்ளிக் கவசம் ஒன்றை திருவண்ணா மலை துர்க்கையம்மன் கோவிலில் உள்ள பிள்ளையா ருக்கு பிச்சைக்காரர் ஒருவர் அன்பளிப்பாக வழங்கியுள் ளார்.

15ஆண்டுகளாக அக் கோவி லின் அருகிலே தங்கிப் பிச்சை எடுத்து வந்துள்ளார்.

மேலும்இப்பிள்ளையாருக்கு எலி வாகனம் ஒன்றை செய்ய வும்ஆவலாகஇருப்பதாகஅவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## பொதுக்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தின் பொதுக்குழுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நிலைய மண்டபத் தில் நடைபெறவுள்ளது. (உ)

மலசலகூடங்கள்

## அமைப்பு

(நவாலி)

பின்தங்கிய கிராம அபி விருத்தித் திட்டத்தின் கீழ், ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் 23 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (உ- 228)

## இராசி பலன்

(தை 20, சனி)

பஞ்சமி மாலை 5.44 வரை
அத்தம் ந. இ 12.13 வரை
ராகுகாலம்-9.36-11.06
சுபநேரம்-3.36-5.06

### மேடம்

மகிழ்ச்சியான சம்பவம், தொழில்சிறப்பு, காரியம், கைகூடும், ஆரோக்கியம்.

### இடபம்

புதியதிருப்பம், சொத்துக் களால் நன்மை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம்.

### மிதுனம்

ரோகபயம், காரியதாம தம், சுபகீர்த்தி, தாய்வழி உறவு.

### கடகம்

வாக்குமேன்மை, கூட்டு முயற்சி, தனவரவு, பிரயாண நன்மை

### சிங்கம்

தனலாபம், வீண்கலகம், பெரியோர் மதிப்பு, முயற்சி தாமதம்.

### கன்னி

பெரியோர்மதிப்பு, காரியம் கைகூடும், சயன சுகம், தொழில்நன்மை.

### துலாம்

உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம், சயன சுகக் குறைவு, சுபசெலவு.

### விருச்சிகம்

தெய்வ சிந்தை, காரியஅனு கூலம், பொருள் சேர்க்கை, கௌரவம்.

### தனுசு

தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், அதி காரம், பொருள் சேர்க்கை.

### மகரம்

பிரயாணம், கட்டுப்பாடு, உஷ்ண வியாதி, சகோதரர் உதவி.

### கும்பம்

காரிய தாமதம், எதிர்பா ராத மனஸ்தாபம், உடல் சோர்வு, குடும்ப நன்மை.

### மீனம்

அபூர்வ சந்திப்பு, களஸ்திர சுகம், காரியம் கைகூடும், தொழில் லாபம்.

வளவன்

# செய்தித் துளிகள்

## கொழும்புத்துறை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் மக்கள் இப்போது மீளக் குடியமர்ந்துவரும் பகுதிகளில்புனரமைப்புபணிகளை செய்வதென்று அண்மையில் இடம்பெற்றயாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

கொழும்புத்துறையில் சுவாமியார் வீதி 2,ஆம்3 குறுக்குத் தெருக்கள், இலந்தைக் குளம் வீதி, புங்கங்குளம் வீதி ஆகியவைகள்இப் புனரமைப்பில் அடங்கும் அப் பகுதிகளில் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்துவது எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (எ-9)

## சந்திப்பும் கலந்துரையாடலும்

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக்குழுவின் இயக்குநர்கள், செயலகப் பணியாளர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சந்திப்பும் கலந்துரையாடலும் எதிர்வரும் 4ஆம் திகதி பருத்தித்துறையிலுள்ள சத்துணவுக் கூடத்தில் நடைபெறவுள்ளது என தலைவர் டாக்டர். எஸ். எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார். (உ- 77)

## திறப்பு விழா

(தென்மராட்சி)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் வட பிராந்திய இணைப்புக்குழுவினால் நடத்தப்படவுள்ள 'சாயிசுதா' மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத் திறப்புவிழா நாளை கோப்பாயில் நடைபெறவுள்ளது.

இணைப்புக்குழுவின் தலைவர். ஸ்ரீ. ஆர். வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இலங்கைக்கான மத்திய இணைப்பாளர் ஸ்ரீ. எம். வன்னியசேகரம் நிலையத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். (உ-71)

## கல்வியங்காட்டில் திருடர் தொல்லை

(கல்வியங்காடு)

கல்வியங்காட்டுப் பகுதியில் ப. நோ. கூ. ச. கிளைகளை உடைத்துத் திருடும் சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றன.

கடந்த வியாழனன்று கல்வியங்காடு டச்சுறோட்டில் உள்ள நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் முதலாம்கிளை திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள நல்லூர் ப நோ. கூ. சங்க கிளைகள் இரண்டில் ஒருமாத காலத்தில் திருட்டு இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது, (உ-245)

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் அமரர்களான மாமனிதர், கலைஞானி அ. செல்வரத்தினம், பேராசான் ஆ. மகாதேவன், ச. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர்களின் நினைவு அஞ்சலிக்கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஆ. சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அமரர் ஆ. மகாதேவன் நினைவுப் பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்படுவதுடன், குரும்பசிட்டி மாணவர்கள் அனைவருக்கும் அமரர்கள் நினைவாகப் பயிற்சிக் கொப்பிகளும் வழங்கப் படவுள்ளன. (உ)

## விளையாட்டுப் போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெற விருந்த யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி காலநிலை சீரின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதிபர் எஸ். புண்ணியசீலன் அறிவித்துள்ளார். (உ)

## விவசாயிகள் கவலை

(மானிப்பாய்)

வலி. தென் மேற்குப் பகுதியில் இவ்வருடம் நெற்செய்கை அமோக விளைச்சலடைந்த போதிலும் அதனை அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடந்த இருநாட்கள் பெய்த மழையினை அடுத்தே அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (செ-232)

## உரம் வழங்கலில் பாரபட்சம்

(ஊர்காவற்றுறை)

வேலணையில் உரவிநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வேலணை கமநல சேவை நிலையத்திலேயே பாரட்சமான முறையில் உரம் விநியோகிக்கப்படுவதாக கூறப்படுகிறது. (உ-75)

## உடுபுடைவைகள் அன்பளிப்பு

(மானிப்பாய்)

வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, மற்றும் தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு அண்மையில், உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரேஇந்தஉடுபுடைவைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (உ- 7, 232)

## பட்டப்பகலில் திருட்டு

(மந்திகை)

பட்டப்பகலில் ஆட்களற்ற வீட்டில் கதவு உடைத்து நுழைந்த திருடர்கள் அங்கிருந்து தாலிக்கொடி மற்றும் பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

திக்கம் பணிக்கர் கோவிலருகில் வசிக்கும் தணிகாசலராசா என்பவரது வீட்டில் கடந்த புதனன்று நடந்த இத்திருட்டுச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-23)

## விபத்தில் சிக்கிமயக்கம்

(மந்திகை)

சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதியதில் மயக்கமடைந்த நபர் பருத்தித்துறைஅரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டிப் பகுதியில் இடம் பெற்ற இந்தச்சம்பவத்தில் உடுப்பிட்டி இலகடியைச் சேர்ந்தகே.தங்கராசா (வயது 31)என்பவரே காயங்களுடன் மயக்கமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

# காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தினால் அறப்பணிகள்முன்னெடுக்க தீர்மானம்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயத்தினால் சமூக மட்டத்தில் அறப்பணிகள் பல மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் புனரமைப்பு மற்றும் ஆலயத்தின் பெயரால் மேற்கொள்ளப்படவுள்ள சமூகசேவைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றபோது,

எதிர்வரும் சித்திரைமாதம் நடைபெறவுள்ள வருடாந்த உற்சவம் நிறைவடைந்தவுடன் ஆலயப் புனரமைப்பை மேற்கொள்வது,

புனரமைப்பு வேலைகள் முடிவுற்றதும் காரைநகர் பகுதியில் இருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் வறிய மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பிற்காக கொடுப்பனவு நிதியம் ஒன்றுஆரம்பித்தல்,

விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்ட தனியார் வைத்திய சேவை நிலையம் ஆரம்பித்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொண்ட கல்விமான்கள் மற்றும் சமூக, சமயப் பெரியார்கள் ஆலயத்தின் அறப்பணிகளுக்கு தமது ஆதரவைத் தெரிவித்ததுடன்,

சகல ஆலயங்களும் இவ்வாறான பணிகளை முன்னெடுத்து ஆலயங்களில் வீணே முடங்கிக் கிடக்கும் சொத்துக்களை சமூக வளர்ச்சிக்கான மூலதனமாக்க வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தனர். (உ-246)

## இந்தியாவில் இருந்து 300 ஜீப்புகள் இறக்குமதி

(கொழும்பு)

கமநல மற்றும் கால்நடை சேவையில் துரித அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக, கமத்தொழில், கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கா, இந்தியாவிலிருந்து 300 ஜீப் வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமைச்சின் அதிகாரிகளுக்காகவே இந்த ஜீப் வண்டிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. (உ-3)

## யாழ்கல்வியியற் கல்லூரியில் கணனிகள் ஆய்வுகூட திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கணனிகள் ஆய்வுகூடத் திறப்புவிழா இன்று மு.ப 11.30 மணிக்கு பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கணனி ஆய்வு கூடத்தினை ஐ.ஐ.எஸ்.நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் கே. விக்னேஸ் திறந்து வைக்கவுள்ளார்.

உலக வங்கியினால் வழங்கப்பட்ட 39 கணனிகள் இற்றைவரை வந்து சேர்ந்துள்ளமையும்,

மேலும் 40 கணனிகள் கல்லூரியின் நூலகமும் தகவல் தொழில் நுட்பமும் பாடநெறிக்காக வழங்கப் பட்டு அவை விரைவில் எடுத்து வரப்படவுள்ளதும் குறிப் பிடத்தக்கது. (உ)

## சட்டவிரோதமான முறையில் பணம்சேர்த்தபடையினர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

சில இராணுவ உயர் அதிகாரிகள உட்பட படையினர் பலரும் சட்டவிரோதமான முறையில் பணம் சம்பாதித்து சொத்து சேர்த்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத்தினர் சிலர் உயர் அதிகாரிகளின் தவறான வழிநடத்தலினால் மோசடியான முறையில் பணம் சம்பாதித்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இவர்களுக்கு எதிராக அடுத்தவாரம் இராணுவ ஒழுக்காற்று குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது (உ-3)

## வன்னிப் பகுதிக்கு 90 லொறிகளில் உணவு பொருட்கள்அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியில் பிரமணாலங்குளம் சோதனைச் சாவடியூடாக விடுவிக்கப் படாத பிரதேசங்களுக்கு 90 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 30 லொறிகளில் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் 60 லொறிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி, மல்லாவி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து 24 ஊழியர்களுடன் 55 நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும்,

67 பேர் வவுனியாவைத்தியசாலையில் சிகிச்சைபெற்று மீட்கப்படாத பகுதிக்குத் திரும்பியதாகவும் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)

## விமான நிலையத்தில் நாடு திரும்பும் தமிழ் பெண்களிடம் மோசடி

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழ்ப் பெண்கள் பலர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு வெளியே வைத்து மோசடிக்காரர்களால் ஏமாற்றப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸ் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

பல தமிழ்ப்பெண்கள்தமது பணம்,நகைகள்,பொருட்கள் என்பவற்றை இவ்வாறான மோசடிகளில் இழந்துள்ளனர்.

இதுமட்டுமின்றி பாலியல் வல்லுறவுக் குற்றங்களும் புரியப்படுவது அறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களைத் தடுக்கும் வகையில், தமிழ்ப் பெண்கள் வீடு திரும்பும் போதுஉறவினர்களைவரவழைத்து அவர்களுடன் பாதுகாப்பாக வீடு செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (உ-3)

## மீனவர் போராட்டத்திற்கு ஆதரவு பெருகுகிறது

(மந்திகை)

மீனவர்கள் கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கி சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்குமாறுகோரி மாவட்டச்செயலகம் முன் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்திற்கு தக்க பதிலை உரிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள் வழங்க வேண்டும்.

அவ்வாறு வழங்கத் தவறின் போராட்டத்தில் தாமும் இணைந்துகொள்ளப் போவதாகவடமராட்சிதொழில்சார் பண்பாட்டு பொது அமைப்புக்களின் பேரவை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அப்பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடல் தொழிலாளர்கள் மீதுவிதிக்கப்பட்ட தடைகளை நீக்குவதில் அரசாங்கம்பொறுப்பற்றுச்செயற்பட்டுவருகின்றது.

இது விடயத்தில் விரைந்து தீர்வு காணத் தவறினால் நாமும் போராட்டக்களத்தில் இறங்குவது தவிர்க்க முடியாதது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

## கசிப்பு கடத்தியவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் இருந்து கசிப்பு எடுத்துச் சென்றவர் கோப்பாய் பொலிஸாரிடம் வசமாகமாட்டிக் கொண்டார்

25 போத்தல் கசிப்புடன் அகப்பட்ட மேற்படி நபர் நேற்றையதினம் யாழ். நீதிமன்றில்ஆஜர்ப்படுத்தப்பட்டபோது 20ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-9)

## இன்று ஒரு தகவல்

# வாகன வசதிகள் எவை?

ஒருவர் உடம்பு முழுவதும் கட்டுப்போட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார். என்ன ஆனது என்று பரபரப்போடு கேட்டேன். ''ஒன்றுமில்லை, வருகிற வழியில் ஒரு சின்ன அக்சிடென்ற் அதுதான் இப்படி ஆய்விட்டது'' என்று சாவகாசமாகச் சொன்னார். ''சின்னவிபத்துக்காகவா இப்படி உடல் பூராவும கட்டு'' என்றேன், சும்மா ஒரு எச்சரிக்கைக்காக அப்படிக் கட்டுப் போட்டிருக்கிறேன் என்றார். அவர் ஒரு மாதிரியான ஆள். அப்படித்தான் பேசுவார். ''சரிஎன்ன நடந்தது? விபரமாகச் சொல்லுங்கள்'' என்றேன்.

''ஸ்கூட்டரில் வேமாக வந்து கொண்டிருந்தேன். எதிரில் ஒரு எருமைமாடு மெதுவாக வந்து கொண்டிருந்தது. இரண்டும் மோதிவிட்டது. நான் எட்டத்தில் போய் விழுந்தேன். எருமைக்கும் ஒன்றும் ஆகவில்லை. ஸ்கூட்டருக்கும்ஒன்றும்ஆகவில்லை. நான் தான் இப்படி ஆகிவிட்டேன்'' என்றார். ''கண்ணைத் திறந்து கொண்டுவர வேண்டும்'' என்று புத்திமதி சொன்னேன். ''கண்ணைத் திறந்து கொண்டுவந்தும் இது நடந்து போய் விட்டது'' என்றார். ''அது எப்படிநடக்கும். நீங்கள் ஒதுங்கிப்போயிருக்கலாமே''என்றேன். 'கண்ணைத் திறந்து கொண்டுவந்தது நானில்லை சார். எருமை மாடு.'என்றார். இப்படியாகத்தான் அவர் பேசிக்கொண்டிருப்பார். அதனால் தான் அவரை ஒருமாதிரியான ஆள்' என்று சொன்னேன்.

அவர் எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் எல்லோரும் இப்படி அலட்சியமாக இருக்கக்கூடாது. விபத்தை விலை கொடுத்து வாங்கக்கூடாது. விபத்துக்களை தவிர்ப்பதற் கென்றால் விலைகொடுக்கலாம். அதற்கு எப்படி விலை கொடுக்கலாம் என்றால் ..... எலக்ரோனிக் ஸ்பீட் கொன்றோல் யூனிற்றை வாங்கி வாகனங்களில் பொருத்தலாம். பஸ் ஸும்லொறியும் வேகத்தைக் குறைத்தாலே பலவிபத்துக்களைத் தடுத்துவிடமுடியும். மேற்குறிப்பிட்டவேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்தினால், அளவுக்கு மீறி ஒருவாகனம் வேகமாகப் போனால் - உதாரணமாக மணிக்கு 60 கிலோ மீட்டருக்கு மேல்போனால்-அந்தக் கருவி '' பீப்பீப் ''என்று சத்தம்போடும்.

அந்தச் சத்தத்தைக் கேட்டுவிட்டு வண்டி ஓட்டுகிறவர்கள் வேகத்தைக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைக்காமல் இன்னமும் வேகமாகப் போனால் எஞ்சின் தானாகவே நின்றுவிடும். அதுமட்டுமல்ல அதன்பின்னர் ஒரு ஐந்துநிமிடம் அதை ஸ்ராட் பண்ணமுடியாது. அங்கேயே நிற்கவேண்டியதுதான்! ஐந்து நிமிடங்களுக்குப் பினனர் தான் அந்த இடத்தைவிட்டுப் புறப்படமுடியும். அதனால் வேகமாகப் போகிறதற்கு யாரும் முயற்சி செய்யமாட்டார்கள். வேகத்தைக் கட்டுப்படுத்துவதனால் விலை மதிப்பில்லாத உயிர்களைக் காப்பாற்ற முடியும். அத னால் இதனைப் பெரிய அசௌகரியமாக யாரும் நினைக்கக் கூடாது.

ஏற்கனவே இந்திய பஸ்களிலே இந்தக்கருவியை வைத்திருந்தார்களாம். 'ஆனால் சிலர் மிகவும் சாமர்த்தியமாக இந்தக் கருவியின் தொடர்பைத் துண்டித்து விட்டு வழக்கம்போலப் படுவேகமாக ஓட்ட ஆரம்பித்து விட்டார்களாம். காரில் போகிறவர்களுக்கும் குடும்பம் இருக்கிறது. வீதியில் போகிறவர்களுக்கும் குடும்பம் இருக்கிறது. அதைக் கொஞ்சம் நினைத்துப்பார்க்க வேண்டாமா? இந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை யாரும் சுலபமாக எதுவும் செய்துவிட முடியாத அளவுக்கு அதைப் பொருத்துவதற்கு வழியைப் பார்க்க வேண்டும்' என்கிறார் ஒரு நேயர்.

நெடுந்தூரம் போகிற பஸ்களிலேயெல்லாம் ஏயர்கண்டிசன், வீடியோ வசதிகளெல்லாம் செய்து கொள்கிறோம். அவற்றில் செலவு செய்கிற பணத்தை இதுமாதிரி ஸ்பீட் மொனிட்டர், VHF டிரான்சீவர் போன்றவற்றிற்காகச் செலவு செய்யலாம். வண்டி நடுவழியில் எங்கேயாவது நின்றுபோனால் - அல்லது எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டுவிட்டால் உடனே தகவல் கொடுப்பதற்கும், உயிரைக் காப்பாற்றுவதற்கும் இந்த வயர்லெஸ் வசதி உதவியாக இருக்கும். செலவையெல்லாம் ஒரு பொருட்டாகக் கருதாமல் இவற்றைச் செய்து விபத்துக்களைப் பெருமளவுக்குத் தவிர்க்கலாம். விபத்துக்களுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் கவனித்துச் சரிசெய்ய வேண்டும்.

எனக்கு நெருக்கமானஒருவர் பஸ்ஸில் சாரதியாக இருக்கிறார். அவரிடம் ஒரு நாள் இந்தச் சாலை விபத்துக்களைப் பற்றி சாவகாசமாகப் பேசிக்கொண்டு இருந்தேன். அவர் கொஞ்சம் முரட்டு சுபாவம் உள்ளவர். அதனால் அவரிடம் சொன்னேன் ... இது போன்ற உங்கள் சுபாவத்தை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். வீதியில் போகிறவர்களும் பஸ்ஸில் போகிறவர்களும் மனிதர் தான். மனிதனுக்கு மனிதன் மரியாதைகொடுக்கவேண்டும் என்றும் அடுக்கிக் கொண்டே போனேன். நீங்கள் சொல்கிற ஒரு மனிதனுக்கு மரியாதை கொடுக்கப்போய்த்தான் ஒரு நாள் ஒரு சின்ன அக்சிடென்ற் நடந்துவிட்டது ,என்றார் அவர்,, அது எப்படி?' என்றேன். 'ஒருநாள் நான் டிரைவ் பண்ணிக்கொண்டு போன பஸ்ஸில் ஒருவயதான தாத்தா நின்று கொண்டு வந்தார். பஸ்ஸில் இருக்கிறவர்கள் யாரும் அவர்மேல் இரக்கப்படவில்லை, நான் இரக்பட்டேன் ,என்றார். என்ன செய்தீர்கள்? என்றேன். 'நான் எழுந்து அவரை எனது ஆசனத்தில் உட்கார வைத்தேன், என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சமாதானப் பேச்சை எதிர்த்து

# தென்பகுதி பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்த முஸ்தீபு!

(கொழும்பு)

இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதென தென்பகுதியைச் சேர்ந்த ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவான பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள்முடிவு செய்துள்ளன.

நாட்டில் வாழும் பெரும்பான்மை இன மக்களுக்கு எதிரான இந்தப் பேச்சுகளை தடுத்து நிறுத்தவேண்டும் எனக்கோரி இவ் ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக பல்கலைக்கழக மாணவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் ஆர்ப்பாட்டங்களின் முதற்கட்டமாக ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை பல்கலைக்கழகத்தில் வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தெரிந்ததே.

சமாதானப் பேச்சுக்களுக்கு எதிராக, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஜே. வி. பி. ஆரம்பித்துள்ள இவ் வேளையில் தென்பகுதி பல்கலைக்கழகங்களும் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், விடுதலைப்புலிகள் தங்களைஆயுத ரீதியாக பலப்படுத்தவே தற்போதுசமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்துள்ளதாக பல்கலைக்கழக மாணவர்அமைப்பு தெரிவித்துள்ளது. (உ-3)

## 'கனவுகள்' கற்பனைகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கே.வி. குணசேகரத்தின் பரிசு பெற்ற சிறுகதைகளின் தொகுதியான கனவுகள் கற்பனைகள் நூல் வெளியீடு நாளை மு.ப 9.30 மணிக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் யாழ். பல்கலைக் கழகத்தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை அதிபர்மு.விக்னேஸ்வரனும், ஆசியுரைகளை சிவஸ்ரீ ச.தானேஸ்வரக் குருக்கள், வணபிதா. தோ.ஜோர்ச் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர்.

வாழ்த்துரைகளை உதவிக் கல்விப்பணிப்பாளர்சிவஞானசுந்தரம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம், முன்னர்ள் அதிபர் ஐ.வேலாயுதர், கிராமசேவையாளர் சி. தயாபரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வெளியீட்டுரை, அறிமுகவுரை, ஆய்வுரைகளை முறையே வைத்தியகலாநிதி லயன் வை.தியாகராஜா, வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், ஆசிரியர் என். விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கே.வி.குணசேகரம் ஒரு பார்வை' என்ற விடயத்தில், யாழ்.பல்கலைக் கழகமுன்னாள்தமிழ்த்துறைத் தலைவர்பேராசிரியர்நா .சுப்பிரமணியன்கருத்துரை வழங்கவுள்ளார்.

நன்றியுரையினை அதிபர் இ.இராஜசேகரம் ஆற்றவுள்ளார். (உ)

## ஐ.தே.மு. அரசின் செயலைக் கண்டித்து திருமலையில் பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக பொது ஜனஐக்கிய முன்னணி அரசினால் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனத்திற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைஐக்கிய தேசிய முன்னணி அரசு இடைநிறுத்தியதை கண்டித்துதிருகோணமலை பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நேற்று முன்தினம் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலைதொண்டராசிரியர் சங்கத்தின்ஏற்பாட்டில் இப்பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது. (உ-4

## உரும்பிராய் கிழக்கில் கசிப்பு உற்பத்தியாளர் பொலிஸாரால் கைது

(கோப்பாய்)

உரும்பிராய் கிழக்குப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில்ஈடுபட்டுக் கொண்டிருந்த சிலர் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கசிப்புஉற்பத்திக்காகஅங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த கோடா மற்றும் பரல்கள் உட்பட கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில்நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவரும்குழுவினர் அப்பகுதி பொது அமைப்புக்களுக்கும் விழிப்புக்குழுவினருக்கும் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-5-79)

## நிரந்தர நியமனம் வழங்குவதில் நிர்வாகம் பாராமுகம் ஊழியர் பரிதவிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் கூட்டுறவு ஊழியர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையில் பல வருடங்களாகத் தொழில் புரிந்து வருகின்றனர்.

தீவுப்பகுதியில்உள்ள வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினா தீவு ப.நோ.கூ சங்க ஊழியர்கள் 30பேர் வரையில் இவ்வாறு தற்காலிகமாக கடமையாற்றுவதாகவும்,

இவர்கள் விடயத்தில் சங்க நிர்வாகம் பாராமுகமாகச் செயற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-75)

## கிண்ணியாவில் ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலைமாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதியான கிண்ணியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஹர்த்தால்அனுஷ்டிக்கப்பட்டது.

சட்டவிரோதமான ஆட்கடத்தல், வரிவசூலிப்பு, மர்மக் கொலைகள் என்பவற்றை கண்டித்தே இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## 8 சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கென சுமார் எட்டு சுயேட்சைக் குழுக்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இந்த எட்டு சுயேட்சைக் குழுக்களானது வேட்பு மனுக்களும் ஜனவரி மாதம் 18ஆம் திகதியில் இருந்து அந்தந்த இடங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபை, கஸ்பாவே, கோறளை, வெலிகம, சம்மாந்துறை, அளவ, திம்புலகல, வலகம்புர, கும்புறுப்பிட்டிய பிரதேச சபைகளுக்காகவும் இச்சுயேட்சைக்குழுக்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. (வ)

## எழுதுவினைஞர் பதவியில் 3475 வெற்றிடங்கள்

தற்போது அரச சேவையில் எழுதுவினைஞர்கள், அதனோடு சேர்ந்த பணிகள் உட்பட நிர்வாக அதிகாரிகள் பதவிகளுக்கு 3ஆயிரத்து 475 வெற்றிடங்கள் நிலவுவதாக பொது நிர்வாக அமைச்சர் வஜிரஅபேவர்த்தனா தெரிவித்துள்ளார்.

ஆயிரத்து 975 எழுதுவினைஞர்கள் மற்றும் அது தொடர்பானவர்கள் ஆயிரம் பேர், 500வனபரிபாலன அதிகாரிகள் ஆகியோருக்கேதற்போது வெற்றிடங்கள் நிலவுவதாக தெரிவித்துள்ளார். (உ- 3)

## சிந்தனைக்கு விருந்து

பழைமையும் புதுமையும் நன்று

பழைமை அனைத்தும் பழுதோ? உலகின்
வழமை அனைத்தும் வழுவோ - இளமை
பிழையோ? நலமான பீடுக் கருத்தில்
விளையுமேல் இவ்விரண்டும் மேல்.

'பழையவன்'

## விளையாட்டு செய்திகள்

## கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகமாகும் புதுமுகங்கள்

(டில்லி)

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையோன ஒரு நாள் போட்டித் தொடரில் இளம் வீரர்களின் எழுச்சியை காண முடிந்ததாக கிரிக்கெட் ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டே கிரிக்கெட் அணிகள் தங்கள் அணிகளுக்கு புதிய வீரர்களை அறிமுகப்படுத்தி அவர்களின் திறமையை, ஒரு நாள் போட்டித் தொடரில் பரிசோதித்து வருவதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

எல்லா அணிகளும் புதிய வீரர்களை அறிமுகப்படுத்துகின்ற போதும் அவுஸ்திரேலிய அணி தனது அணியின் பழைய வீரர்களை வைத்து புதிய சாதனைகளை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-10-5)

## மும்முனை ஒருநாள் போட்டி நியூஸிலாந்து முன்னணியில்

(சிட்னி)

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் தற்போதைய முடிவுகளின் படி நியூஸிலாந்து அணி 17 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும் தென்னாபிரிக்க அணி 13 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் அவுஸ்திரேலிய அணி 9 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளன.

இப் புள்ளிகளின் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு நியூஸிலாந்து அணியும் தென்னாபிரிக்க அணியும் தெரிவாகும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னன் என வர்ணிக்கப்படும் அவுஸ்திரேலிய அணி இம் முக்கோணப் போட்டியில் அதிர்ச்சித் தோல்விகளைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5-10)

## மெய்வன்மை போட்டி

(தென்மராட்சி)

கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் பா. வெற்றிவேல் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் முன்னாள் அதிபர் ச. திருப்பதி பிரதமவிருந்தினராகப் பங்கு கொள்ளவுள்ளார். (உ- 77,23)

## சதுரங்க வலைப்பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்டு வரும் ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் வரிசையில்,

சதுரங்கப் போட்டி நாளை காலை 9.00 மணிக்கும்,

வலைப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (உ)

## யசீர் அரபாத்தை கொல்ல தவறியதற்கு ஷரோன் மனவருத்தம்

(ரெல்அவிவ்)

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தை 20 வருடங்களுக்கு முன் கொன்றிருக்க வேண்டும், அப்படி செய்யாததால் இப்போது மனம் வருந்துவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

1982 ஆம் ஆண்டு பலஸ்தீன விடுதலை அமைப்பு பி.எல்.ஓ. வை லெபனானில் இருந்து விரட்டியடிப்பதற்காக இஸ்ரேலியப் படைகள் லெபனானுக்குள் ஊடுருவியிருந்தன.

இதன் போது, இஸ்ரேலின் பாதுகாப்பமைச்சராக ஏரியல் ஷரோன் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இஸ்ரேலியப் பிரதமரின் இக்கூற்றை ஐரோப்பிய யூனியனின் தற்போதைய தலைமைநாடான ஸ்பெயினின் வெளிநாட்டு அமைச்சர் வன்மையாக கண்டித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## வேலையற்றோர் தொகை அமெரிக்காவில் அதிகரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அங்கு பெரும் நெருக்கடி நிலைஎழுந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 3லட்சத்து60 ஆயிரம் பேர் தொழில் வாய்ப்பின்றி இருந்ததாகவும் மறு வாரத்திற்குள் 3லட்சத்து90 ஆயிரம் என இத் தொகை அதிகரித்துள்ளதாகவும் இன்னும் சில தினங்களில் இத் தொகை 4லட்சமாக அதிகரிக்கும் வாய்ப்பு காணப்படுவதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இருந்தபோதும், இவ் எண்ணிக்கையை அடுத்தஇரண்டு மாதங்களில் குறைத்து விடலாம் என அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது. (உ-7)

# உலக தரிசனம்

### இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினை தீர

## மூன்று கட்டங்களைக் கொண்ட புதிய சமாதானத் திட்டம்

(ஜெருசலம்)

இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய சமாதானத் திட்டமொன்றை பிரான்ஸ் அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதாக பலஸ்தீன அதிகாரசபையின் உயர் அதிகாரியான நபீன் ஷாத் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய சமாதானத் திட்டம் மூன்று கட்டங்களைக் கொண்டது.

அதில் முதலாவது கட்டமாக சுதந்திர பலஸ்தீனப் பிரகடனமும், இரண்டாவது கட்டமாக சர்வதேச மேற்பார்வையின் கீழ் பொதுத் தேர்தலை மூன்றாவது கட்டமாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையான உறவை கட்டிவளர்ப்பது ஆகிய. மும்முனைத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு ஜேர்மன் எகிப்து, ஜோர்தான் மற்றும் சவுதிஅரேபியா போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. (உ-5)

## கணனி வீடியோவால் கைகள் பலவீனமடையும்

(லண்டன்)

கணனி வீடியோக்கள் விளையாடும் நபர்களின் கரங்கள் பலவீனமடைவதாக பிரித்தானிய விஞ்ஞான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கணனி மூலம் பொழுதைப் போக்குவதற்கென கையடக்க வீடியோ உபகரணம் மூலம் கணனியை இயக்கும்போது அதிர்வு காரணமாக நரம்புகள் தளர்ச்சி அடைவதுடன், கைகள் பலவீனமடைகின்றன.

இதனால் கணனி உபயோகிக்கும் குழந்தைகள் விடயத்தில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டுமென்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (உ-7

## உள்ளூர் ஆயுதக் குழுக்களிடையே ஆப்கானில் மோதல் தொடர்கிறது

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ளூர் ஆயுதக் குழுக்களிடையே கடும் மோதல்கள இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கார்போஸ் நகரை அடுத்துள்ள மாகாணத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்காகவே இந்த இரண்டு ஆயுதக் குழுக்களும் மோதலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த மோதல்களில் கனரக மோட்டார் குண்டுகள், றொக்கட் ஏவுகணைகள், தானியங்கி துப்பாக்கிகள் என்பன பயன்படுத்தப்பட்டு வருவதர்கவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் குழு மோதல்களில் ஆப்கானிஸ்தானின் தற்போதைய இராணுவம் தலையிடவில்லை.

இது இவ்வாறிருக்க ஆப்கானிஸ்தான் அரசின் ஆதரவு பெற்ற ஆயுதக் குழு இந்த மோதலில் தம்மிடம் சரணடைந்து விட்டதாகவும் மற்றைய ஆயுதக் குழு தெரிவித்துள்ளது. (உ-5)

## படைகளை விரிவாக்குக ஆப்கானிஸ்தான் தலைவர் பிரிட்டனிடம் கோரிக்கை

(லண்டன்)

ஆப்கானிஸ்தானிலுள்ள சர்வதேச படையினரை விரிவாக்கம் செய்வதற்கு பிரிட்டன் முன்வர வேண்டுமென ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசின் தலைவரான ஹமீட் ஹர்ஸாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு லண்டனுக்குச் சென்ற அவர், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரை சந்தித்து நடத்திய இப் பேச்சுவார்த்தையின் போது ஹமீட்ஹர்ஸாய் இந்த கோரிக்கையைமுன்வைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள சர்வதேசப் படையினரை விரிவாக்கம் செய்வது தொடர்பில் பிரிட்டனின் பங்குவரையறுக்கப்பட்டது என்றும் அது அப்படியே தொடரும் என்றும் இது தொடர்பில் பிரிட்டிஷ் அரசு பல்வேறு நாடுகளுடனும் பேசி வருவதாகவும் ரொனிபிளேயர் கூறியுள்ளார். (உ-5)

## உலக பொருளாதார மன்றக் கூட்டம் ஆரம்பம்

(நியூயோர்க்)

உலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டம் நேற்று முன்தினம் நியூயோர்க்கில் ஆரம்பமாகியுள்ளது.

ஐந்துநாட்கள் தொடர்ந்து இடம்பெறும் இக்கூட்டத் தொடரில், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெரிய, சிறிய தொழிலதிபர்களும், அரசியல் பிரமுகர்களும் கலந்து கொள்கின்றனர்.

பொருளாதாரத் தேக்க நிலையைத் தவிர்ப்பது, நீடித்த வளர்ச்சி, உலக நாடுகளிடையே வறுமையை ஒழிப்பது போன்றவை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றன. (து)

## செய்தியாளரை விடுவிக்க தீவிரவாதிகள் நிபந்தனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்பொன்றினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்க செய்தியாளரான டனிஸ் ஸ்பேர்ளை விடுதலை செய்ய அமெரிக்காவுக்கு குறித்த அமைப்பு நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது.

24 மணிநேரத்தினுள் செய்தியாளர் ஸ்பேர்ளைவிடுதலை செய்ய வேண்டுமானால் பாகிஸ்தானிலுள்ளஅனைத்து அமெரிக்க செய்தியாளர்களையும் அந்நாடு திருப்பிஅழைக்க வேண்டும் என தீவிரவாத அமைப்பு கோரியுள்ளது.

அத்துடன் ஆப்கானிஸ்தானில் வைத்து கைது செய்யப்பட்ட பாகிஸ்தானியர்களையும் விடுதலை செய்யுமாறு அவ்வமைப்பு கேட்டுள்ளது.

இது தொடர்பாகஅமெரிக்க தொலைகாட்சிநிலையமொன்றுக்கு பாகிஸ்தானின் குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பு ஈமெயில்ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (செ-7)

## பதவி விலகப் போவதாக பாக். அதிபர் அச்சுறுத்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப்தாம் பதவிவிலகப் போவதாக அச்சுறுத்தியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனவரி 12 ஆம் திகதி தொலைக்காட்சியில் நிகழ்த்திய உரைக்கு மூன்று நாட்களுக்கு முன் இந்த அச்சுறுத்தலைவிடுத்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கை காஷ்மீர் சம்பந்தமான பிரச்சினைகள்தொடர்பாக ஜெனரல் முஷாரப் வகுத்த விதிமுறைகளை இராணுவத் தளபதிகள் பின்பற்றத் தவறியதையடுத்தேபதவிவிலகப்போவதாக அச்சுறுத்தியிருப்பதாக கூறப்படுகிறது.

முஷாரப் பதவிவிலகும் அளவிற்கு அரசிற்குள்ளே வேற்றுமைகள் வளர்ந்திருப்பதாக ''ஜஷரத்'' என்ற பாகிஸ்தான் வாரஇதழ்செய்திவெளியிட்டுள்ளது. (து)

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்
- குறள்

# வலம்புரி

## பழையதும் புதியதும்!

மீன்பிடித்தடைக்கு எதிராக மீனவ சங்கப்பிரதிநிதிகள் யாழ். செயலகத்திற்கு முன்பாக கடந்த மூன்று தினங்களாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்போராட்டத்திற்கு உதட்டளவிலாவது அரசியற்கட்சிகளும், பொது அமைப்புக்களும் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றன. யாழ்.குடாநாட்டில் மீனவர்கள் எதிர்நோக்கும் ''தொழிற் தடை'' இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய அரசாங்கம் சமாதானத்தின் பேரால் ஆட்சியைக் கைப்பற்றியது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்திசமாதானத் தீர்வை எட்டுவ்தற்காகவே சிங்களமக்களும், தமிழ் மக்களும் தமதுவாக்கைவழங்கினர். இதன் அடிப்'படையில் புலிகளும் அரசும் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தியிருக்கிறது. இந்நிலையில் யாழ்.குடாநாட்டின் மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசு தடைவிதிப்பதன் நோக்கம் காரணம் என்ன என்பதை அறிய முடியவில்லை.

மீனவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட விடயத்தில் அரசு அசமந்தம்காட்டுமாயின் அதன் விளைவு பாரதூரமாக இருக்குமென்பதை சம்பவம் நடந்து முடிந்த பின்பு உணர்வது அவ்வளவு புத்திசாலித்தனமாக இருக்காது.

தற்போது மீன்பிடித் தடைக்கு எதிராக மீனவர் சங்கங்கள் கிளர்ந்தெழுந்து யாழ். செயலகத்திற்கு முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் விசித்திரம்என்னவெனில், கூட்டமைப்புக் கட்சியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி மறியற் போராட்டத்தை கைவிடுமாறு கோர கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ரெலோ சிவாஜிலிங்கம் தீர்வு கிடைக்கும் வரை மறியற் போராட்டத்தை நிறுத்தக் கூடாதெனக் கூறியுள்ளார்.

இதில் அரசுடன் பேசி தீர்வு காணலாம் என ஆனந்தசங்கரிஎம்.பி கூறியிருப்பது பழைய புராணத்தின் ஒரு பாடல். ரெலோ சிவாஜிலிங்கம் மறியற் போராட்டத்தை தொடரச் சொல்வதுமீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் புதிய புராணம்.

---

**திறனாய்வுக் களம்**

# படித்துப் பயன்பெறத்தக்கதான "சுருக்கெழுத்து தட்டச்சுத் தொழில்நுட்பக்கலை வரலாறு" நூல்

நூல்: சுருக்கெழுத்து, தட்டச்சு தொழில்நுட்பக்கலை வரலாறு
தொகுப்பாசிரியர்: க. வ. சிவச்சந்திர தேவன்
வெளியீடு: வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி
விலை: ரூ. 70/-

சுருக்கெழுத்து தட்டச்சுத் தொழில்நுட்ப வரலாற்றை ஓரளவு இலக்கிய நயத்தோடு நகைச்சுவையும் சேர்த்து வாசிப்பவர்களை சலிப்படையச் செய்யாது இந்த நூலில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

முதலாவது சுருக்கெழுத்து நூல்

'சுவாமி விவேகானந்தர் தமது சுற்றுப் பயணங்களின் போது நிகழ்த்திய உரைகளை ஜே. ஜே. குட்வின் என்ற ஆங்கில இளைஞர் சுருக்கெழுத்தில் எழுதி, நூலாக்கி வெளியிட்டுள்ளார்'-போன்ற பலரும் அறியாத தகவல்களை இந்த நூலில் தேடித் திரட்டித் தந்துள்ளார் ஆசிரியர்.

பிற்மன் என்பவரால் 1837 ல் முதன் முதலாக சுருக்கெழுத்து நூல் வெளியிடப்பட்டமையும் இதைத் தொடர்ந்து இக்கலை எவ்வளவு தூரம் மக்களுக்கு உதவியது என்பதனையும் இந் நூலில் ஆசிரியர் விபரித்துள்ளர்.

வரலாற்று அடிப்படை

வேகமும், பரபரப்பும் நிறைந்த வாழ்விலே அதன் தேவையைப் பூர்த்தி செய்ய உருவான சுருக்கெழுத்தின் வரலாற்றை ஆசிரியர் வரலாற்று அடிப்படையிலே விளக்க முற்பட்டிருக்கின்றார். சுருக்கெழுத்துக்கும் தட்டச்சுக்கும் உள்ள அத்தியந்த உறவினைச் சுட்டிக் காட்டும் ஆசிரியர் அதன் பயன்பாட்டையும் சொல்லத் தவறவில்லை'' என யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி

**- கணேஷ் -**

எஸ். சிவலிங்கராசா தமது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளது பொருத்தமானதாகவே இருக்கிறது.

சங்ககாலத்தில்

சங்க காலத்தில் சுருக்கெழுத்து முறைகள் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன என்பது போன்ற சங்கதிகளை இந் நூல் மூலமாக நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

தட்டச்சுப் பொறியில் x-ம் x-ம் அடுத்தடுத்து இருப்பதால் ஏற்படும் தர்மசங்கடமான விளைவுகளையும் இந் நூலின் 38-ஆம் பக்கத்தில் ஆசிரியர் நகைச்சுவைகலந்து சொல்லியிருப்பது ரசிக்கத்தக்கதாகவே இருக்கிறது.

ஆசிரியரே குறிப்பிட்டுள்ளது போல் இந்நூல் ஒரு பூரண தொகுப்பாக இல்லாவிட்டாலும், இத்துறையில் ஈடுபாடுடையவர்களுக்கு ஒரு முன்னோடியாக இருக்கும் என்பதில் அதிக சந்தேகமில்லை.

பத்திரிகைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், மாணவர்கள் ஆகியோர் படித்துப் பயன் பெறக் கூடிய நூல்.

---


# எழுத்து வன்மையாலும் பேச்சாற்றலாலும் மக்கள் மனங்கவர்ந்த பேறிஞர் அண்ணா

**அறிஞர் அண்ணாவின் நினைவுதினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**

தென்னிந்தியமாநிலமான தமிழ் நாடு முன்னர் மறறாஸ் ஸ்ரேற் என்று அழைக்கப்பட்டது. அந்தமாநிலத்தின் புகழ் பெற்ற முதல் அமைச்சராக இருந்து ஆட்சியை அலங்கரித்தவரும், தமிழகத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டுவித்தவரும் 'அறிஞர் அண்ணா' என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்ட சி. என். அண்ணாதுரை அவர்களாவார். இந்த அண்ணா தன் இள வயதில் முதன் முறையாகப் பெரியார் ஈ. வே. ரா. அவர்களைச் சந்தித்த வேளையில், படிப்பு முடிந்ததும் உத்தியோகம் ஏதாவது பார்க்கப் போகிறாயா?' என்று பெரியார் கேட்க 'உத்தியோகம்பார்க்க விருப்பமில்லை. பொது வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன்' என்று பதிலளித்தார். இந்த முதல் சந்திப்பு 1935 ம் ஆண்டில் திருப்பூரில் நிகழ்ந்தது. அந்தச் சந்திப்புத்தான் அண்ணாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைத் தந்தது. காஞ்சிபுரம் உயர் நிலைப் பள்ளியில் அண்ணா படித்துக் கொண்டிருந்த போதே 'குடியரசு' ஏட்டில் பெரியார் எழுதிய கருத்துகளில் நாட்டம் கொண்டவரானார் 'ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும்' என்று பெரியார் குறிப்பிட்டிருந்ததை அந்த வயதிலேயே அண்ணா புரிந்து கொண்டார், 'வகுப்பு' என்பதைப் பள்ளிக் கூடத்து வகுப்பாக அவர் கருதாமல் 'சாதி வகுப்புமுறை' என்று தெரிந்து கொண்டார். மற்றும் 'மக்களுக்குச் சுய மரியாதையும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்' என்று சுட்டிக் காட்டியிருந்ததைப் படித்தறிந்து தமது இதயத்தில் நீங்கா நினைவாக்கிக் கொண்டார். இருபத்தைந்து வயதில் முதன் முதலாகப் பெரியாரைத் திருப்பூரில் பார்த்த போது அவரையும் இவருக்குப் பிடித் திருந்தது.

இந்தி எதிர்ப்பு

கட்டாய இந்தியை எதிர்த்துப் போராடியதில் பெரியா



ரைப் போலவே அண்ணாவும் கைதாகி நான்குமாதச் சிறைத் தண்டனை பெற்றார். சென்னை சிறையில் அண்ணாவைப் பெரியார் முக மலர்ச்சியோடு வரவேற்றார். இருவரும் தமிழ், தமிழ் என்று பேசி உணர்ச்சிவசமாகவே இருந்து வந்தனர். ஒரு சமயம் பாகிஸ்தானின் தந்தையும், முஸ்லிம் லீக் கட்சியின் தலைவருமாக விருந்த ஜனாப் ஜின்னாவைப் பெரியார் சந்தித்து அரசியல் நிலைமை பற்றி உரையாடினார். அப்பொழுது கூட இருந்து ஜனாப் ஜின்னாவின் ஆங்கிலப்பேச்சைத் தமிழில் மொழிபெயர்த்துப் பெரியாருக்கு உதவினார் அண்ணா. அண்ணாவின் ஆங்கில மொழித் திறமையை கண்ட ஜனாப் ஜின்னா வியப்படைந்தார். ஜின்னாவின் முன் பெரியாரும், அண்ணாவும் தந்தையும், மகனுமாகவே ஆனார்கள்.

சொற்பொழிவு

தென்னூர் என்ற இடத்தில் நாவன்மை மிக்க அண்ணா பேசிய பேச்சுப் பெரியாரைப் பிரமிக்க வைத்து விட்டது. 'இந்தியா என்பது ஒரு துணைக் கண்டம்! அது பல நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டும், ஐரோப்பாக் கண்டத்தில் முப்பத்திரண்டு தனித்தனி நாடுகள் இருக்கின்றன. இருந்தும் ஐரோப்பா முழுவதும் ஒரு குடையின் கீழ் இருக்கவேண்டும் என்று இது வரை யாரும் கூறவில்லை. அதுபோலவே இந்தியாவும் ஒரே குடையின் கீழ் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை' என்று பெரியாரின் அடிச் சுவட்டில் அண்ணா பேசினார். இதில்தான் அண்ணாவின் அரிய பேச்சாற்றல், சொல்லவேண்டிய விளக்கங்களைத் தெளிவாகத் தெரிவிக்கும் சிறப்பு ஆகியவை வெளியாயின. அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் அண்ணாவின் எழுத்துக்களில் உள்ளங்களைப் பறிகொடுத்தார்கள்.

**மதிவாணர்**

உணர்ச்சிமிக்க கருத்துக்களை உருக்கமாக எழுதுவதுதான் மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஊட்டியிருந்தது. நாராயணசாமி என்ற பெயருடன் இருந்த நாவலர் நெடுஞ்செழியன், இராமையாவென்ற பெயருடனிருந்த பேராசிரியர் அன்பழகன் போன்றமாணவர்கள் அண்ணாவின் எழுத்துத் திறமையையும்பேச்சாற்றலையும் அறிந்து அவரை அழைத்துப் பல்கலைக்கழகத்தில்பேச வைத்தனர். 1942ஆம்ஆண்டு இதுநடைபெற்றது. பழமையில் ஊறிய பண்டிதர்களின் மனம்புண்படுமேஎன்றுதுணை

(3ஆம் பக்கம் பார்க்க)

---

## தினசரி தியானம்

### இறைவனதுஆணை

அவனன்றி ஓர் அணுவும் அசையாது

- தாயுமானவர்

இறைவா, உன்னை நான் மறந்து விட்டாலும் என் வாழ்க்கை உனது ஆணைக்குட்பட்டிருக்கும்படி அருள் புரிவாயாக.

ஓர் ஊரை அடைய விரும்புபவன்ஆங்கு செல்லும் இரும்புப்பாதை வண்டி பார்த்து ஏறிக் கொண்டால் போதும். பின்பு கவலையற்றிருந்தாலும் அவன் அவ்வூர் போய்ச் சேர்வான். இறைவனை அடைவது ஒன்றே உயிர்களுக்கு அவர் இட்டிருக்கும்ஆணையாகும். அவர் ஆணைப்படி ஒழுகுபவர் அவரை அடைவது திண்ணம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# யுத்த நிறுத்த கண்காணிப்பில் ஐ.சி.ஆர்.சி. ஈடுபடாது

## மட்டு. வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கும் குழுவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அங்கம் வகிக்காதென அதன் மட்டக்களப்பு வதிவிடப் பிரதிநிதி அர்மின் குறோர் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்படும் செயல்களை மட்டுமே ஐ.சி.ஆர்.சி. கண்காணிக்கும்.

அதேவேளை, பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் பாதுகாக்கப்படாவிட்டால், அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் ஐ.சி.ஆர்.சி. எடுக்கும் என்றும் தெரிவித்தார். (ந)

### 3 பொலிஸ் அத்தியட்சகர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட 43 பொலிஸார் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் 3 பொலிஸ் அத்தியட்சகர்களும்; 3 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் அடங்குவர் (வ)

### கிளிநொச்சிக்கான...

திறப்பை அடுத்து இராணுவத் தின் கடைசிக் காவலரண் ஓமந்தை பகுதியில் இருக்கும் எனவும் ஓமந்தைப் பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத் தில் விடுதலைப்புலிகளின் காவலரண் அமைந்திருக்கும் என்றும் இதற்கு இடைப்பட்ட பிரதேசம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்காணிப் பில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கிளிநொச்சி யில் இருந்து எழுதுமட்டுவாள் ஊடாக யாழ்ப்பாணத்திற்கான பாதை திறப்பு அடுத்த கட்டமாக ஆராயப்படவுள்ளது. (வ)

### பொறுப்பாளர்...

அவர்களிடம் கேட்டுக்கொண் டார்.

இதேவேளை தற்போதைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், கிழக்கு மகாணத்தைச் சேர்ந்த முன்னாள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தனித்தனியே சந்தித்து பேசியுள்ளனர்.

இதன் போது வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை அவர்களது சொந்த இடத்தில் குடியேறுதல் தொடர்பாக பேசப்பட்டதுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தின் பிரதியும் பூவண்ணனிடம் காட்டப்பட்டது. (வ)

### யுத்தமா...

செய்யும்படி கண்டி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஆரோக்கியமான முறையில் நடைபெற்று வரும் இச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் செயலர் பாலபட்டபெண்டி விடுத்துள்ள இந்த அறிக்கை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் சமாதான முயற்சிக்கு குந்தகம் விளைவிக்குமா என்பது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### மீனவர்கள்...

கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு இருந்தனர். இருந்த போதும் யாழ் செயலகத்தினுள் எவரையும் செல்லவிடாது மறியல் போராட்டக்காரர் மனித சங்கிலியாக நின்று தடுத்தனர். இதனால் மூன்றாவது நாளாகவும் யாழ். செயலகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.

இதே வேளை தமக்கு தீர்க்கமான முடிவு எட்டப்படும் வரை போராட்டத்தை தாம் கைவிடப் போவதில்லை எனவும் இதனால் ஏற்படும் பல்வேறு பாதிப்புக்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பு என்றும் மீனவர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ந-59)

### கிளி...

மூலமாக வழங்கப்படவுள்ளது.

தொலைபேசி வசதிகள் இருந்தால் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் படும் துன்ப துயரங்களை வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்ட முடியும் என்று டாக்டர் ஜயலத் தெரிவித்துள்ளதுடன் இதற்கு வேண்டிய சகல அனுமதிகளையும் பாதுகாப்பு அமைச்சிடம் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

# மன்னாருக்கும் பாதை திறப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி - கண்டி வீதி திறக்கப்படுவதற்கு முன்னதாக மன்னாருக்கான பாதை ஒன்று திறக்கப்படவுள்ளது. உயிலங்குளம், ஆண்டான்குளம் ஊடாக மன்னாருக்கான பாதை இன்னும் இரண்டொரு தினங்களில் திறக்கப்படவுள்ளதாக மன்னார் அதிபர் எஸ். விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார். (வ)

# விலை உயர்வைக் கண்டித்து ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்று கொழும்பில் ஜே.வி.பி.யினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள லிப்டன் சதுக்கத்தில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்திற்கு ஜே.வி.பி யின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தலைமை தாங்கினார். இவ்வார்ப்பாட்ட்த்தில் விலையேற்றத்தைக் கண்டித்து அரசுக்கெதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ந-4)

# கடும் மழையால் பயிர்ச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று வரை 169 மில்லிமீற்றர் மழை பெய்திருப்பதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று முழு நாளும் பெய்த கடும் மழையினால் நெற் செய்கை, வெங்காயச் செய்கை கடும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக யாழ் விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. (வ)

# பாராட்டு விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நாளை நடைபெற இருந்த பாராட்டு விழா சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ந)



மல்லாகம் ம.வி.யின் பாண்ட் வாத்திய அரங்கேற்ற நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். படத்தில் இடமிருந்து வலமாக திருமதி. பா.குகநேசன், பயிற்றுவிப்பாளர் வா.வசீகரன், பாண்ட் வாத்திய அணித்தலைவர் க.கோபிகிருஸ்ணா, அதிபர் ம.நாகேந்திரசீலன், பொறுப்பாசிரியை செல்வி. சு.தேவேஸ்வரி ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பாண்ட் வாத்தியக் குழுவினர் நிற்பதையும் காணலாம்.

# கொக்குவில் இந்துவில் ஒன்று கூடல்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் நடத்தும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதனின் வாழ்த்துரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக ஜி.ரி.இசற். இன் பொறியியலாளர் தயாநந்தன் கலந்துகொள்வார். (ந)



யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. வரதராஜா மங்கள விளக்கேற்றுவதையும், கௌரவ விருந்தினராகக்

## புலமைப்பரிசில் 2002

22வது பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | க. டிலக்ஷன் | 176 |
| 2. | பி. நந்திகரன் | 173 |
| 3. | இ. சாரதாதேவி (ஆனைப்பந்தி மெ.மி.பா.) | 172 |
| 4. | வ. தனுஜன் (யா. இந்து ஆரம்ப பா.) | 169 |
| 5. | இ. சுரேந் (கொக்குவில் இந்து ஆ.பா.) | 168 |

BOND
யாழ்நகர்
(C/3429)

வீக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு 1
புதிய பாடத்திட்டம்
பழைய பாடத்திட்டம்
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
Mon. to Fri. காலை 8.30-2.00 (O.T)
தரம் 6, 7, 8, 9, 10, 11 இற்கான
அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
(C/3430)

மிகவிரைவில் எதிர்பாருங்கள்...
"வலம்புரியின் வாரமலர்"
உங்கள் எண்ணத்தில் சுரக்கும் கற்பனை ஊற்றை சுமந்து வருகிறது.
கவிதை
இலக்கிய நயம்
சிறுகதை
மங்கையர் பகுதி

- சிறுகதை
- நாவல்
- கட்டுரை
- கேள்வி பதில்
- வியாதிக்கு விளக்கம்
  (உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்களின் பதில்)
- மங்கையர் பகுதி
- பேனா நண்பர்கள்
- சிறுவர் சிந்தனை
- அரசியல் விளாசல்

**இன்னும் பல.. பல..**

**உங்கள் ஆக்கங்களும் வலம்புரியின் வாரமலரில் இடம்பெற வேண்டுமா?**
**விரைந்து அனுப்புங்கள்.**

ஆசிரியர்
வலம்புரி வாரமலர்
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

...வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. வரதராஜா மங்கள விளக்கேற்றுவதையும், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட குகஸ்ரீ க. சொக்கன், பாடசாலை அதிபர் திரு. க. சண்முகலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.


மீசாலை நா. துஷாந் எழுதிய

## உன் கையில் உலகம்

**கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு.**

இடம்: சித்தன்கேணி மகா கணபதி பிள்ளையார் கோவில்
காலம்: நாளை 2002-02-03. பிற்பகல் 02.00 மணி.
பிரதம விருந்தினர்: திரு. எஸ். துரைசிங்கம்
(ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரிய பீடம், வலம்புரி)
சிறப்பு விருந்தினர்: திரு. என். விஜயசுந்தரம் (ஆசிரியர்)

அனைவரும் வருக.

அமைப்புக்குழு

விளம்பர அனுசரணை:
சுப்றா கல்வி நிலையம்
சித்தன்கேணி
(C/3433)



தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்...



# நிருத்திகா ஜீவலர்ஸ்



177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். PHONE: 021 - 2694



இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.